2022 ஆம் ஆண்டிற்கான செயற்சாதனை அறிக்கை

தேசிய பொலிஸ் ஆணைக்குழு

செலவினத் தலைப்பு இலக்கம் 08

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – தாபன பக்கத்தோற்றம் 02- 08

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு.....09- 31

அத்தியாயம் 03 – ஆண்டின் மொத்த நிதிச் செயற்சாதனை 32- 42

அத்தயாயம் 04 – செயற்சாதனை சுட்டி 43-43

அத்தியாயம் 05- நிலையான அபிவிருத்தி நோக்கு (ளுனுபு) நிறை. செயற்சாதனை.....44-45

அத்தியாயம் 06- மானிட வளப்பக்கத் தேற்றம் 46-47

அத்தியாயம் 07 – ஒப்பீட்டு அறிக்கை 48--54

01 அத்தியாயம்
நிறுவனப் பக்கத்தேற்றம்

1.1. அறிமுகம்

2002 ஆண்டில் 17 ஆவது அரசியல் யாப்பு மறுசிரமைப்பு ஊடாக முதல் தடவையாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினை தாபித்தன் நோக்காக அமைந்தது பொலிஸ் சேவையின் அரசியல் தலையீடுகள் அற்ற மற்றும் சுயாதீனமாக செயற்படுவதன் மூலம் வினைத்திறன்மிக்க, மக்களுக்கு உகந்த, பயன்மிக்க சேவையினை பொது மக்களுக்கு வழங்குவதாகும். இந் நோக்கத்தினை எட்டுவதற்காக பொலிஸ் சேயின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவி உயர்வு, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பொலிஸாருக்கு எதிராக பொது மக்களின் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்தல் போன்ற அதிகாரங்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் இருபதாவது அரசியல் யாப்பு மறுசீரமைப்பினை அமுல்படுத்தியதைத் தொடர்ந்து பொலிஸ் சேவைக்குரிய நியமனங்களை மேற்கொள்ளல், இடமாற்றம், பதவி உயர்வு மற்றும் ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள்ளும் அதிகாரங்களை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் இருந்து நீக்கி அரச சேவை ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டதுடன் அம் மறுசீரமைப்பின் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்ட பணியாக அமைந்தது பொலிஸ் உத்தியோகத்தருக்கு அல்லது பொலிசாருக்கு எதிராக மக்கள் அதிருப்தியடைதல் மற்றும் அது தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் உட்பட

இருப்பினும் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 21 அரசியல் யாப்பு சீர்திருத்தம் மூலம் அரச சேவை ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டு இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் நியமனம், இடமாற்றம், உபதவி உயர்வு, ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் சேவையில் இருந்து இடைநிறுத்துதலுக்கு உரிய அதிகாரங்களை மீள தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டது. இதற்கு அமைய இதுவரையில் அரச சேவை ஆணைக்குழுவினால் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட அவ் விடயப்பரப்பிற்கு உரியதாக 11,000 ஆவணங்களுக்கு அண்மித்த அளவு 2022 டிசம்பர் மாதம் தொடக்கம் இடைகிடையே தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக 20 ஆவது மறுசீரமைப்பு மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டு இருந்த பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை செயற்பாடுகளும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்கு உரியது என்பதனால் அச் செயற்பாடுகளையும் முன்னெடுப்பது தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசியல் யாப்பின் பரிந்துரைகளுக்கு அமைய புதிய ஆணைக்குழு நியமிக்கப்படும் வரை காணப்படும் ஆணைக்குழுவிற்கு அதிகாரங்களை அமுல்படுத்த முடியும் என்று சட்டமாதிபரினால் வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இது எவ்வாறக இருப்பினும் அதிகார சபையின் அதிகார உள்ளீடுகள் ஏற்பட்ட மாற்றங்களுடன் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விடயப்பரப்பரப்பு விரிவடைந்துள்ளதுடன் அவ் விரிவான அதிகாரங்களை அமுல்படுத்துவதற்காக தேவையான மானிட, பொளதீக வளத்தினைப் போன்று நிதி வளப் பற்றாக்குரையும் சவலாக காணப்படுகின்றது. காணப்படும் பிரச்சினைக்குரிய நிலமைகளுக்கு மத்தியிலும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு சவால்களை வெற்றிகொள்வதற்காக உரிய செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் அறிக்கை மூலம் தழுவப்படாத 2022.01.01 தொடக்கம் 2022.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்குள் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொது மக்கள் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு உரியதாக வழங்கப்பட்டுள்ள வெற்றிகள் மற்றும் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி நியமனம் பெற்ற ஆணைக்குழுவினால் அது வரை காணப்பட்ட விசாரணை முறைகளின் தன்மை, வினைத்திறன், எந்தளவு பொது மக்களுக்கு நிவாரணத்தை வழங்கியுள்ளது என்பது தொடர்பாக தீவிரமாக ஆராயப்பட்டது. இதற்கு அமைய புதிய ஆணைக்குழுவினால் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைகளுக்காக பின்பற்றப்பட்ட செயற்பாட்டு ஒழுங்கில் காணப்பட்ட குறைபாடுகளை சுட்டிக்காட்டி முறையான விசாரணை செயற்பாட்டு முறைகளுக்கு அமைய பொது மக்கள் விசாரணை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு புதிய பிரவேசத்தின் தேவை அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கு அமைய 2021 மார்ச் மாதத்தில் இப்புதிய பிரசேவசத்தின் ஊடாக முறைப்பாடுகளை விசாரணை செய்யும் புதிய முறைகள் அமுல்படுத்தப்பட்டன.

இப் புதிய முறையின் விஷேட அடையாளங்களாக அமைவது பொது மக்கள் முறைப்பாடுகள் கிடைத்ததன் பின்னர் முறைபாடுகளை ஆலராய்ந்து முறைப்பாட்டில் குறிப்பிபடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் கோரப்பட்டுள்ள நிவாரணங்கள் தொடர்பில் பரிசோதனைகளை மேற்கொள்வதாகும். மேலதிக தேவைகள் அவசியப்படின் மீண்டும் முறைப்பாட்டாளரிடம் வினவி மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் முறைப்பாட்டிற்கு அமைவாக உரிய பொலிஸ் நிலையத்தில் இருந்து ஆவணப்படுத்தப்பட்ட சாட்சிக் குறிப்பினைப் பெற்று முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இச் சம்பவம் இடம்பெற்றதா, இன்றேல் இடம்பெற்ற சம்பவம் குறித்து அதனை சமநிலைக்கு அமைய நியாயமான தீர்மானங்களை எட்டி பொது மக்கள் முறைப்பாடுகள் குறித்து பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்குதாகும்.

விசாரணைகள் என்பது தெரிந்த விடயத்தில் இருந்து தெரியாத விடயம் தெடர்பில் கவனம் செலுத்துவதாகும். அதே போன்று விசாரணை செயற்பாடுகளை பக்கசார்பின்றி அமுல்படுத்துவது மாத்திரமன்றி, பக்கசார்பின்றி அமுல்படுத்துவதாக பொது மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். இதற்கு அமைய புதிய ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட முறைகள் ஊடாக விசாரணைகள் விசாரணைகளை மேற்கொள்ளும் முறையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதனைப் போன்று விசாரணகளை மேற்கொண்டு பூர்த்தி செய்ய வேண்டிய முறைகளில் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு அமைய பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைகளைப் பூர்த்தி செய்ய முடிவது ஆணைக்குழுவிற்கு சமர்பிக்கப்பட்டு அதன் அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் மாத்திரம் என ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதன் போது அனைத்து முறைப்பாடுகளும் குறைந்தபட்சம் இரண்டு முறையேனும் ஆணைக்குழுவிற்கு சமர்பித்து கலந்ரையாடப்படும். அதாவது முறைப்பாடு கிடைத்தவுடன் ஆணைக்குழுவிற்கு சமர்பித்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் விசாரணைகளை பூர்த்தி செய்யும் போது பரிந்துரைகளை சமர்பித்து முடிவுறுத்துவதற்காக அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதன் மூலம் ஒரு சில சிக்கலான மற்றும் பிரச்சினைக்குரிய முறைப்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழுப் பத்திரத்தின் மூலம் அவற்றின் விசாரணை முன்னேற்றங்கள் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு உரிய விடயங்களை சமர்பித்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இது எவ்வாறாக இருப்பினும் காணப்பட்ட பல்வேறுபட்ட உள்ளக பரச்சினைக்குரிய நிலமைகளுக்கு மத்தியிலும் புதிய விசாரணை முறைகளுக்கு இவ் உத்தியோகத்தர்களை வடிவமைப்பதற்காக விசாரணை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டன. இப் பயிற்சிகள் இடைக்கிடையே ஆணைக்குழு அங்கத்தவர்கள் மூலம் வாராந்தம் சட்ட உத்தியோகத்தர் ஊடாகவும் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

2022 பெப்ரவரி தொடக்கம் ஜூன் வரை முழு நாடும் எதிர்கொண்ட பொருளாதா மற்றும் சமூக பிரச்சனைகள் காரணமாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணை செயற்பாடுகளுக்கும் தடைகள் ஏற்பட்டன. நாட்டில் தபால் சேவை மற்றும் போக்குவரத்து சேவைகள் சீர்குலைந்தமை போன்றன நிறுவனத்தின் செயற்பாடுகளை உரியவாறு முன்னெடுத்துச் செல்வதற்கு தடைகள் ஏற்பட்டன. இது எவ்வாறாக இருப்பினும் முடியுமான அனைத்த சந்தர்பங்களிலும்

உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்திற்கு வருகைதருவதற்கும், வீட்டில் இருந்து கடமைகளை மேற்கொள்வதற்கும் ஆணைக்குழுவினால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. புதிய விசாரணை பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டதன் பின்னர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் மீண்டும் விசாரணை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப் விசாரணை முறையில் காணப்பட்டும் முக்கியத்துவம் வர்ய்ந்த ஒரு சில விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. பொது மக்கள் முறைப்பாடுகள் பொலிஸ் நிலையத்திற்கு செல்லாமை..
2. முறைப்பாடுகள் தெளிவற்று இருப்பின் மற்றும் மேலதிக தகவல்கள் அவசியமாயின் மீண்டும் முறைப்பாட்டாளரிடம் கடிதம் மூலம் வினவி பதிலை எழுத்துமூலம் பெற்றுக் கொள்ளல்.
3. இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தேவையான ஆவணங்களை

இத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தேவையான ஆவணங்களின் சாட்சிகள் பொலிஸ் நிலையத்தினால் பெற்றுக் கொள்ள தீர்மானத்தல் மற்றும் முறையான விசாரணை திட்டங்களுக்கு அமைய அனைத்த பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைகளை அமுல்படுத்தல்.

மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு விசாரணைகளை மேற்கொள்ளபட்ட முறையினை மாற்றியமைத்து பயன்மிக்க புதிய முறையில் பிரவேசித்து பல்வேறுபட்ட சவால்களை வெற்றி கொண்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தி பொது மக்கள் முறைப்பாடு தொடர்பில் இடம்பெறும் தாமதங்களை தவிர்பதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு முடிந்துள்ளது.

இப் புதிய முறையினை அறிமுகப்படுத்தியதன் பின்னர் பொலிஸ் நியைலத்திற்க மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொது மக்களிடம் இருந்து கிடைக்கு முறைப்பாடுகளுக்கு வரவேற்புகள் கிடைக்கின்றன.

1.2. நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று, நோக்கம்

நோக்கு

"நம்பகமானதும், பலம்பொருந்திய, சுயாதீனமான, பக்கசார்பற்ற பொது மக்களுக்கு உகந்த பொலிஸ் சேவையினை உருவாக்குதற்கு உதவிகளை வழங்குதல், "

பணிக்கூற்று

"பொது மக்களின் முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் மானிட உரிமையினைப் பாதுகாத்து சட்ட ஆதிக்கத்தினை கௌரவிக்கும் பண்புசார் தரம்மிக்க பொலிஸ் சேவையினை உருவாக்குதற்கு உதவிகளை வழங்குதல்."

நோக்கம்

- அரசியல் யாப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமையினை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸ் சேவைக்கு எதிராக காணப்படும் பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்து பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் வழங்குதல்.
- பொது மக்களுக்கு உகந்த பொலிஸ் சேவையினை உருவாக்கும் வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக நேர்மனப்பாங்கு வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பொலிசாருக்கு எதிராக பொது மக்கள் முறைப்பாடுகளை குறைத்து பொலிஸ் சேவையின் பண்புசார் தரத்தினை விருத்தி செயற்வதற்காக பொது மக்களின் பங்குபற்றலினைப் பெற்றுக் கொள்ள செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

பெறுமதிகள்

சுயாதீனம்
நேர்மை
பொறுப்புக்கள்
பக்கசார்பற்ற
உண்மையான
நேர்மையான
சட்டத்தை கௌரவிக்கும்
அஹிம்சை
தொடர்ச்சியான பயிற்சி
ஆக்கத்திறன்
துரித பதில்
வினைத்திறன்


1.3. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

இவ் அறிக்கையில் மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட கால எல்லையான 2022 ஆண்டுக்குள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்டது அரசியல் யாப்பின் 20 ஆவது சீர்திருத்திற்கு அமைய வழங்கப்பட்டுள்ள உரிய அதிகாரங்கள் ஆகும். அவ் அதிகாரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

அரசியல் யாப்பின் 20 சீர்திருத்தத்தின் 155 ஈ வாசகத்திற்கு அமைய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

"பொலிஸ் உத்தியோகத்தருக்கு அல்லது பெரிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக மக்கள் பிரதநிதிகளின் அல்லது எவரேனும் தரப்பினர் அதிருப்தியடையும் பட்சத்தில் அல்லது கிடைக்கும் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கா ஆணைக்குழுவிற்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியதுடன் பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய அது தொடர்பில் நிவாரணம் வழங்க வேண்டியது, அப் பணிகளுக்காக ஆணைக்குழுவினால் மக்கள் பிரதிநிதிகள் அல்லது அதிருப்தியடைந்த தரப்பினரினால் கிடைக்கும் முறைப்பாடுகளைப் பெறுப்பேதற்காக மற்றும் விசாரணைகளை மேற்கொள்வதற்கான செயற்பாட்டு ஒழுங்குகளை நிலைப்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகளை வகுக்க முடிகின்றது."

1.4. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



1.5. ஆணைக்குழுவின் பிரதான பிரிவுகள்

ய. நிருவாகம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

டி. பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு

உ. நிதிப் பிரிவு

1.6. அமைச்சு / திணைக்களம் / மாகாண சபையின் கீழ் காணப்படும் நிறுவன நிதியம்.

பொலிஸ் ஆணைக்குழுவிற்கு இது உரியதல்ல. (தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் இயங்குகின்றது)

1.7. வெளிநாட்டு உதவி பெரும் செயற்திட்டங்களின் தகவல்கள் (இருப்பின்)

ஏற்கனவே வெளிநாட்டு உதவி பெருவதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், செஞ்சிலுவை அமைப்பு போன்றவற்றுடன் கலந்துரையாடப்படுவதுடன் உதவி பெருவதான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

02. அத்தியாயம்

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

ஒவ்வொரு பிரிவுகளினதும் முன்னேற்றங்கள், எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் மற்றும் எதிர்கால இலக்கு.

2.1 நிருவாகம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு.

2.1.1. நிருவாகப் பிரிவு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்குரிய மானிட வள நிருவாகம் மற்றும் முகாமைத்துவம், புதிய உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்ளல், அவர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குதல், ஆணைக்குழுவிற்கு இணைப்பு இணைப்பு செய்யப்பட்டுள்ள பணியாளர் சபையிக் நாளாந்த நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் அதன் பணிகளை மேற்கொள்வதற்காக தேவையான பொருட்கள் மற்றும் உபகரண பெறுகை செயற்பாடுகள் நிருவாகப் பிரிவிற்குரிய பிரதான பணி மற்றும் பொறுப்பாகும்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணியாளர் சபை, இலங்கை நிருவாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை போன்ற நாடு தழுவிய சேவைகள் மற்றும் அபிவருத்தி உத்தியோகத்தர் சேவை, பொத முகாமைத்தவ உதவியாளர் சேவை மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவை போன்ற இணைந்த அரச சேவைகளில் இணைப்பு செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை உள்ளடக்கியுள்ளது. மாகாண பணிப்பாளர் பதவியிற்காக ஓய்பெற்ற அரச நிறைவேற்று தரத்தின் உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். சட்ட உத்தியோகத்தர் மற்றும் ஊடாக உத்தியோகத்தர் ஆகிய பதவிகளுக்காக பொலிஸ் ஆணைக்குழுவினால் நேரடியாக உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் பொது நிருவாக அமைச்சினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிரந்தர உத்தியோகத்தர்களைப் பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்பங்களில் பொது நிருவாக சுற்றரிக்கை இலக்கம் 03/2018 இன் கீழ் ஓய்பெற்ற உத்தியோத்தர்களும் ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் மீள அமர்த்தி வெற்றிடப் பதவிகளுக்கு இணைப்பு செய்யப்பட்டுள்ளன.

அரசியல் யாப்பின் 21 ஆவது சீர்திருத்தினை அமுல்படுத்தியதைத் தொடர்ந்து தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டு இருந்த கடமைகள் விரிவடைந்துள்ளமையினால் அக் கடமை செயற்பாடுகளுக்காக போதியளவு மேலதிக பணியாளர் சபை அவசியாகவுள்ளது. அது குறித்து முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினை அறிவுறுத்தியதன் பின்னர் மேலதிக பணியாளர் சபை 2022.12.16 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டது. இதற்கு அமைய 2022.12.31 ஆம் திகதியன்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணியாளர் சபை விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

2.1.2. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணியாளர் சபை விபரங்கள் 2022.01.01தொடக்கம் 2022.12.31 வரை

அட்டவணை 01

தொடர் இலக்கம்	பதவி	சேவை	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	சம்பள குறியீடு	சேவையில் உள்ள		
					நிரந்தர	ஒப்பந்த	வெற்றிடம்
1	செயலாளர்	இ.நி.சே.வி.த.	01	ளுடு-3	01	-	-
2	சிரேஷ்ட உதவிச் செயலாளர்	இ.நி.சே .ஐ	01	ளுடு-1	01*	-	-
3	பணிப்பாளர்	இ.நி.சே .ஐ	01	ளுடு-1	01	-	-
4	மாகாண பணிப்பாளர்	ஒப்பந்தம்	10	60இ000 ∴-	-	10	-
5	பிரதம கணக்காளர்	இ.க.சே ஐ	01	ளுடு-1	01	-	-
6	உள்ளக கணக்காய்வாளர்	இ.க.சே .ஐஐ.∴ஐஐஐ	01	ளுடு-1	-	-	01
7	உதவி / பிரதிப் பணிப்பாளர்	இ.நி.சே .ஐஐ.∴ஐஐஐ	02	ளுடு-1	01	-	01
8	உதவிச் செயலாளர்	இ.நி.சே . ஐஐஐ	01	ளுடு-1	-	-	01
9	சட்ட உத்தியோகத்தர்	திணைக்களமய	01	ளுடு-1	01	-	-
10	பிரதான விசாரணை உத்தியோகத்தர்	ஒப்பந்தம்	01	60,000/-	-	-	01
மொத்தம்			**20**		**06**	**10**	**04**
11	நிருவாக உத்தியோகத்தர்	மு.உ.வி.த.	01	ஆ-7		-	01
12	மொழி பெயர்ப்பாளர் சி.∴ஆ	அ.மெ.சே.	01	ஆ-6		-	01
13	மொழி பெயர்ப்பாளர் சி.∴த	அ.மெ.சே.	01	ஆ-6	01	-	-
14	தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	த.தொ.சே.	01	ஆ-6	01	-	-
மொத்தம்			**04**		**02**	**-**	**02**
15	ஊடக உத்தியோகத்தர்	திணைக்களமய	01	ஆ-4	01	-	-

16	விசாரணை உத்தியோகத்தர்	திணைக்களமய	12	ஆ-4	12	-	-
17	அபிவிருத்தி உத்தியோகத்தர்	அபிவிருத்தித உத்தியோகத்தர் சேவை	12	ஆ-4	12	-	-
18	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்	மு.உ.சே.	22	ஆ-2	20	01	01
19	விசாரணை உதவியாளர்	ஒப்பந்தம்	03	30,000/-	-	-	03
20	தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	த.தொ.சே.	04	ஆவு-1	04	-	-
21	குழு செயலாளர்	ஒப்பந்தம்	01	50இ000 ∴-	-	01	-
மொத்தம்			**55**		**49**	**02**	**04**
22	புள்ளிவிபரவியல் செயற்பாட்டாளர்	திணைக்களமய	01	ஆ-1	01	-	-
23	சாரதி	சாரதி சேவை	06	ீடு-3	04	-	02
24	அலுவலக பணி உதவியாளர் சேவை	அ.உ.சே.	13	ீடு-1	11	-	02
மொத்தம்			**20**		**16**	**-**	**04**
முழு மொத்தம்			**99**		**73**	**12**	**14**

2.1.3. 2022 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர் பயிற்சி பாடநெறிக்காக பங்கேற்றல்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களின் கொள்ளவு விருத்தியிற்காக 2022 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலத்திற்கு நிறுவளத்தின் அனைத்து பணியாளர் உள்ளடங்களாக உத்தியோகத்தர்களின் கோரிக்கைக்கு அமைய பயிற்சிப் பாடநெறிகளில் பங்கேற்றுள்ளனர் இதற்காக ரூபா 212,500.00 நிதி செலவிடப்பட்டுள்ளது. 18 உத்தியோகத்தர்கள் பயிற்சி வேலைத்திட்டங்களுக்காக பங்கேற்றுள்ளதுடன் அவ் உத்தியோகத்தர்களின் பெயர்பட்டியல் மற்றும் பயிற்சிப் பாடநெறி தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை 02

	பெயர்	பதவி	பயிற்சிப் பாடநெறி	பாடநெறிக் கட்டணம்
1	திருமதி. ஏ.என்இ தர்சனி	முகாமைத்துவ சேவை உதவியாளர்	விடுமுறை எழுது வினைஞர்களின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் 02 நாட்கள்	ரூபா.8500/-
2	திருமதி ஏ.எஸ்.பீ. அதுகோரல	முகாமைத்துவ சேவை உதவியாளர்	வருடாந்த சொத்து ஆய்வு மற்றும் சொத்து வெளியேற்றல் - 02 நாட்கள்	ரூபா .8500/-
3	திரு. கே. பிரேமகுமார	முகாமைத்துவ சேவை உதவியாளர்	போக்குவரத்து முகாமையாளர் (ஒன்லைன் முறை) – 02 நாட்கள்	ரூபா .7000/-
4	திரு ஜானக சமந்த குமார ஹேரத்	சாரதி	அலுவலக பணி உதவியாளர்கள் மற்றும் சாரதிகளின் சிந்தனை மற்றும் தொழில்சார் அறிவு விருத்தியினை மேம்படுத்தல் - 02 நாட்கள்	ரூபா .8500/-
5	திரு டப்ளியூ.ஏ.எஸ். பிரநான்து	அலுவலக பணி உதிவியாளர் சேவை	அலுவலக பணி உதவியாளர்கள் மற்றும் சாரதிகளின் சிந்தனை மற்றும் தொழில்சார் அறிவு விருத்தியினை மேம்படுத்தல் - 02 நாட்கள்	ரூபா .8500/-
6	திரு. அசிரு லன்சகார	அலுவலக பணி உதிவியாளர் சேவை	அலுவலக பணி உதவியாளர்கள் மற்றும் சாரதிகளின் சிந்தனை மற்றும் தொழில்சார் அறிவு விருத்தியினை மேம்படுத்தல் - 02 நாட்கள்	ரூபா .8500/-
7	திருமதி றுவனி ஜயவர்தன	அலுவலக பணி உதிவியாளர் சேவை	அலுவலக பணி உதவியாளர்கள் மற்றும் சாரதிகளின் சிந்தனை மற்றும் தொழில்சார் அறிவு விருத்தியினை	ரூபா .8500/-

			மேம்படுத்தல் - 02 நாட்கள்	
8	செல்வி ஏ.ஆர்.எஸ். செவ்வந்தி	முகாமைத்துவ சேவை உதவியாளர்	தற்போதைய அலுவலக முறைகள் மற்றும் அலுவலக முகாமைத்துவம் - 02 நாட்கள்	ரூபா .7500/-
9	திருமதி ஏ.என். தர்சனி	முகாமைத்துவ சேவை உதவியாளர்	ஒழுக்காற்று செயற்பாட்டு ஒழுங்குவிதிகள் - 02 நாட்கள்	ரூபா .8500/-
10	திருமதி சுபானி கமகே	சட்ட உத்தியோகத்தர்	ஆங்கில டிப்ளோமா ஐஐஐ கட்டம் - 6 ½ மாதங்கள்	ரூபா .25000/-
11	திருமதி சாமிகா சுபோதினி	சிரேஷ்ட உதவிச் செயலாளர்	ஆங்கில டிப்ளோமா - 6 ½ மாதங்கள்	ரூபா .25000/-
12	டப்ளியூ.எம்.டி.கே. விக்ரமசிங்ஹ	சிரேஷ்ட உதவிச் செயலாளர்	ஆங்கில டிப்ளோமா - 6 ½ மாதங்கள்	ரூபா .25000/-
13	திருமதி பீ.எல்.டி. பிரவீனி	பிரதம கணக்காளர்	ஆங்கில டிப்ளோமா - 6 ½ மாதங்கள்	ரூபா 25000/-
14	திரு. வை.ஜீ.ஆர்.பீ. பெரேரா	உதவிச் செயலாளர்	ஆங்கில டிப்ளோமா - 6 ½ மாதங்கள்	ரூபா 25000/-
15	திருமதி தனுஜா பிரநான்து	பணிப்பாளர் ∴ பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை	ஆங்கில டிப்ளோமா - 6 ½ மாதங்கள்	ரூபா .25000/-
16	திருமதி. ஐ.எம்.ஜீ.ஐ. கமகே	விசாரணை உத்தியோகத்தர்	ஆங்கில டிப்ளோமா - 6 ½ மாதங்கள்	ரூபா .25000/-
17	திரு. பீ.சீ.டி. பிரநான்து	தொலைபேசி செயற்பாட்டாளர்	வுநடநிாழநெ ளுமடைடள ரூ நுவஙைரநவவந(ஒன்லைன்) - 02 நாட்கள்	ரூபா .8500/-
18	திரு கேமிந்த றுபேறு	தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	தமிழ் மொழி பயிற்சிப் பாடநெறி - 200 மணித்தியாலங்ள்	ரூபா .8500/-

2.1.4. 2016 இலக்கம் **12** கொண்ட தகவல் அறியும் சட்டத்திற்கு அமைய தகவல்களை வழங்குதல்.

2022.01.01 ஆம் திகதி தொடக்கம் 2022.12.31 ஆம் திகதியளவில் மேல் குறிப்பிடப்பட்ட சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தகவல்கள் தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழ் குறிப்பிடப்பபட்டவாறு அமைகின்றன.

கிடைக்கப் பெற்ற தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை	34
வழங்கப்பட்ட தவகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை	26
நிராகரிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளின் எண்ணக்கை	06
தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை	02

2.1.5. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுளள் புதிய வேலைத்திட்டங்களை திட்டமிடல், ஒழுங்கு செய்தல், அமுல்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தல் இப் பிரிவின் பிரதான பணி மற்றும் பொறுப்பாகும். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் கடிதங்கள், பொது மக்கள் முறைப்பாடுகள் போன்றன வகைப்படுத்தப்பட்டு விரிவான பகுப்பாய்வு அறிக்கை மாதாந்தம் ஆணைக்குழுவிற்கு சமர்பிக்கும் செயற்பாடுகள் ஆராய்ச்சிப் பிரிவனால் மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் கொள்கை அடிப்படையிலான விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை எட்டும் போது அப் புள்ளிவிபிரம் அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. ஆணைக்குழுவின் ஊடகப் பிரிவு மற்றும் தகவல் மற்றும் தொடர்புசாதனப் பிரிவு இப் பிரிவின் கீழ் செயற்படுகின்றது.

2.1.6. ஊடகப் பிரிவு

ஆணைக்குழு மற்றும் பொலிஸ் சேவை தொடர்பாக நாளேடுகளில் அன்றாடம் பிரசுரமாகும் செய்திகளைப் பெற்று அவற்றின் அறிக்கைகளை வாரத்திற்கு ஒருமுறை ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வரல் ஊடகப் பிரிவின் பொறுப்பு ஆகும். மேலும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களுடன் உரிய தொடர்புகளைப் பேணி தேவையான ஊடக ஒத்துழைப்பினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் இப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் ஊடக கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல் இப் பிரிவு மூலம் நிறைவேற்றப்படுகிறது. அதற்கு மேலதிகமாக உபாய வழிமுறைத் திட்டமிடல் உள்ளிட்ட ஆணைக்குழுவின் ஆவணவாக்கல் பணிகளும் அதனோடு தொடர்புடைய ஆவண ரீதியான நடவடிக்கைகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

2.1.7. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஊடகப் பிரிவினால் இணைப்பு செய்யப்பட்ட இலத்திரணியல் ஊடகங்கள் (தொலைக்காட்சி,வானொலி)) நிகழச்சிகள் 2022.01.01-2022.12.31 வரை

அட்டவணை 3

	ஊடக நிறுவனங்கள் மற்றும் நிகழ்ச்சிகள்	பங்கேற்பு	திகதி (ஒளிபரப்பு ∴ ஒளிப்பதிவு திகதி)	நிகழ்ச்சியின் கால எல்லை
1	ஒலபெரப்புக் கூட்டுத்தாபனத்தின் சுதேச சேவையின் "சுபாரதி" உரையாடல் மண்டபம்.	திரு. எஸ். லியனகம மற்றும் திரு பிரியந்த சஞ்ஜீவ (ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்)	2022 ஜுன் 24 காலை 7-8	01 மணித்தியாலம்
2	தேசிய தொலைக்காட்சியின் "ஆயுபோவன்" நேரடி வேலைத்திட்டம்.	திரு. எஸ். லியனகம மற்றும் திரு பிரியந்த சஞ்ஜீவ (ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்)	2022 ஜுன் 26 காலை மணித்தியாலயம் 8.00 – 8.30	30 நிமிடங்கள்
3	சுயாதீன தொலைக்காட்சியின் சேவையின் "7 ஆவது மணித்தியாலம்" வேலைத்திட்டம்.	திரு சந்திரா பிர்நான்து (தலைவர் தே.பொ.ஆ) மற்றும் திரு பீ.டி. லியநாரச்சி (ஊடக உத்தியோகத்தர் தே.பொ.ஆ)	2022 செப்டம்பர் 20 காலை மணித்தியாலம் 7.00 – 8.00	01 மணித்தியாலம்
4	சிரச ஊடக வலையமைப்பின் வு.ஏஜ அலைவரிசையின் " தேசிய பணிக்கு" வேலைத்திட்டம்.	திரு ஐ.எம். கருணராத்ன (ஊடாக மாகாண பணிப்பாளர் ஐ) திரு அஜித் குணசேகர (மத்திய நிலைய பணிப்பாளர் ஐஐ)	2022 ஒக்டோபர் 07 இரவு 9.00 – 10.00 சிரச – காலை 10.00 – 11.00	01 மணித்தியாலம்
5	சிரச தொலைக்காட்சியின் காலை "பக்கத்தோற்றம்" வேலைத்திட்டம்.	திரு சந்திரா பிர்நான்து (தலைவர் தே.பொ.ஆ)	2022 செப்டம்பர் 30 ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளது டன் 2022 ஒக்டோபர் 07 ஆம் திகதி ஒளிபரப்பட்டது.	30 நிமிடங்கள்

2.1.8. தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப அலகு

தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் தொடர்புபட்ட செயற்பாடுகளை மேற்கொள்வது இப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள கடமையாகும். புதிய இணையத்தளத்தினை உருவாக்குதல். அதனை சமகாலப்படுத்தி பயன்படுத்துவோருக்காக இலகுவான முறையில் அதனை முன்னெடுப்பது இப் பிரிவின் பொறுப்பாகும்.

2.1.9. சட்டப் பிரிவு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு அரசில் யாப்பின் 20 ஆவது சீர்திருத்தத்திற்க அமைய வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய பொது மக்களுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களினால் அல்லது பொலிஸ் படையனியனியினால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் கிடைக்கும் பொது மக்கள் முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன் அம் முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவது பொது மக்கள் முறைப்பாட்டுப் பிரிவின் மூலமாகும். பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவினால் பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் போது ஏற்படக் கூடிய பிரச்சினைகளின் போது அது சார்ந்ததாக எழும் சட்ட நிலமைகள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்கும் செயற்பாடுகள் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தலைவரின் வழிகாட்டல் ஆலோசனையின் கீழ் பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் போது எழும் சட்டப் பிரச்சினைகளை தீர்ப்பது அனைத்து விசாரணை உத்தியோகத்தர்களுக்கும் வாரத்திற்கு மூன்று நாட்கள் பயிற்சி வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் தலைவரின் வழிகாட்டல் ஆலோசனையின் கீழ் இலங்கையில் சட்டத்துறையில் சட்டம் தொடர்பில் விவாதத்திற்கு உட்படும் சட்டரீதியிலான பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அவ் அறிக்கை சமர்பிக்கபடுகின்றது. அத்துடன் உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் தொடர்பில் கௌரவ சட்டமாதிபருடன் கலந்துரையாடி உரிய ஆவணங்களை சமர்பிக்கும் பணிகள் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2.2. பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு

அரசியல் யாப்பின் இருபதாவது சீர்திருத்தின் 155 ஈ வாசகத்தின் கீழ் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள ஒரேயொரு பிரதான பணியான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அல்லது பொலிஸ் படையணிக்கு எதிராக கிடைக்கும் முறைப்பாடுகளை பொறுப்பேற்று விசாரணைக்கு உட்படுத்தல் மற்றும் நிவாரணம் வழங்குவது இப் பிரிவின் பிரதான பொறுப்பாகும். 21 ஆவது அரசியல் யாப்பின் சீர்திருத்தமும் அவ் அதிகாரங்கள் அதேவாறு மாற்றமின்றி அமுல்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்கள் முறைப்பாட்டு விரணைப் பிரிவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்துவது தொடர்பிலான முன்னேற்றங்களை ஆணைக்குழுவிற்கு அறிக்கைப்படுத்துவதும் பணிகளினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இப் பிரிவின் பொறுப்பாளர் இலங்கை நிருவாக சேவையின் 1 ஆம் வகுப்பின் உத்தியோகத்தர் என்பதுடன் அவர் பணிப்பாளராகவும், அச் சேவையின் 11/111 வகுப்பின் இரு உத்தியோகத்தர்கள் பிரதி ∴ உதவிப் பணிப்பாளர்களாகவும் பதவி விக்கின்றனர். இருப்பினும் கடந்த ஆண்டு பூராகவும் பிரதி ∴ உதவிப் பணிப்பாளரின் கீழ் ஒரு பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்றது. மாகாணப் பணிப்பாளர்கள் பத்துப் பேரின் மேற்பார்வையின் கீழ் ஆணைக்குழுவின் 09 மாகாணங்களில் அமுல்படுத்தப்படுவதுடன் கூடுதலான முறைப்பாடுகள் கிடைக்கும் மேல் மாகாணத்திற்காக இரண்டு மாகாணப் பணிப்பாளர்கள் உள்ளனர். இவ் அலுவலகத்தின் மூலம் பொது மக்கள் முறைப்பாடுகளைப் பொறுப்பேற்கும் பணிகள் இடம்பெறுகின்றன. மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட காலத்திற்குள் மாகாண பணிப்பாள்கள் அவர்களுக்கு நேரடியாக கிடைக்கும் முறைப்பாடுகள் மற்றும் பிரதான அலுவலகத்தினால் அனுப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை செயற்பாடுளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் பொலிஸ் சேவைக்கு எதிராக பொது மக்கள் முறைப்பாடுகளை பொறுப்பேற்பதும், விசாரணகளை மேற்கொள்வதற்கும் பண்டாரநாயக்க

சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தின் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவினால் மற்றும் மாகாண அலுவலகத்தினால் மேற்கெள்ளப்படுகின்றது.

2.2.1. பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் சேவைகள்

- முறைப்பாடுகளைப் பெறுப்பேற்றல்.
- விசாரணைகளை மேற்கொள்ளல்.
- முறைப்பாட்டாளர்களை அறிவுறுத்தல்.
- பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையினால் ஏதேனும் கடமைகளை புறக்கணித்தல் அல்லது ஒழுக்கத்திற்கு எதிராக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பின் அது தொடர்பாக ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள்வது பொலிஸ்மா அதிபர் அல்லது உரிய பொறுப்பாளர்களுக்கு அனுப்புதல்.
- பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் பொலிசாரினால் செயற்பட வேண்டிய முறைகள் தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல்.
- முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படும் முறைகள் தொடர்பாக மக்களுக்கு வழிகாட்டல் ஆலேசனைகளை வழங்குதல்.
- ஆணைக்குழுவிற்கு உரியதல்லாத முறைப்பாடுகளுக்காக முறைப்பாட்டாளர்களை உரிய இடத்திற்கு அனுப்புதல்.
- 1960 துரித அழைப்பு சேவைகள் மூலம் 24 மணித்தியாலங்கள் பூராகவும் முறைப்பாட்டாளர்களுக்கு துரித நிவாரணங்களை வழங்குதல்.

2.2.2. 2022 ஆம் ஆண்டில் பொது மகள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவின் செயற்சாதனைகள்

2020 டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் 2021 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பொது மக்கள் முறைப்பாட்ட விசாரணை செயற்பாட்டு முறைகள் 2022 ஆம் ஆண்டில் மிகுந்த ஒழுங்காக மற்றும் முறையான அடிப்படையில் முன்னெடுக்கப்டுகின்றது. விசாரணை உத்தியோகத்தர்களைப் போன்று மாகணப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் பணிப்பளர் (பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை) இனால் இவ் விசாரணை செயற்பாட்டு முறைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைய மற்றும் இடைக்கிடையே ஆணைக்குழுவினால் வழங்கப்படும் கட்டளைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்னு அமைய கீழ் குறிப்பிடப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. **புதிய முறைப்பாடுகளை பொறுப்பேற்றல்.**

பொலிஸ் உத்தியோகத்தரின் அல்லது பொலிஸ் சேவையின் மூலம் ஏதேனும் அநீதி இடம்பெறும் பட்சத்தில் பொது மக்களினால் அல்லது சிவில் அமைப்பினால் அல்லது அவர்களின் பிரதிநிதிகளினால் ∴ சட்டத்தரணி ஊடாக சமர்பிக்கப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

- ❖ முறைப்பாடுகள் கிடைக்கும் முறைகள்.

I. தபால் மூலம் அனுப்புவதனால்.
II. 1960 அவசர அழைப்பு சேவைக்கு அறிவிப்பதன் மூலம்.
III. பக்ஸ் செய்வதன் மூலம்.
IV. மின் அஞ்சல் மூலம்.
V. பொது மக்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமைக்கு உள்ளடக்குவதன் மூலம்.
VI. வருகைதந்து கையளிப்பதன் மூலம்.

2. **முறைப்பாடுகளை விசாரணை செய்வதன் மூலம்.**

- ❖ புதிய முறைப்பாடுகளை தலைவருக்கு அனுப்புதல்.
- ❖ அனைத்தையும் ஆராய்ந்து விசாரணைக்கு உட்படுத்தி தேவையான ஆலோசளைகளுடன் பிரதான அலுவகத்தில் உள்ள மாகாண இணைப்பினை மேற்கொள்ளும் உத்தியோகத்தருக்கு அல்லது மேல் மாகாண முறைப்பாடாயின் நேரடியாக உரிய உத்தியோகத்தருக்கு தலைவரின் முறைப்பாடுகள் பொறுப்பளிக்கப்படும்.
- ❖ அவ் வசாரணை உத்தியோகத்தரினால் உரிய மாகாண அலுவலகத்தின் இலகத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் விசாரணை திட்டத்தின் வரைவினைத் தயாரித்து தலைவருக்கு சமர்பித்தல்.
- ❖ தலைவரின் ஆலோசனைக்கு அமைய அனைத்து முறைப்பாடுகளும் மாகாண இணைப்பு உத்தியோகத்தர் ஊடாக மாகாண அலுவலகத்திற்கு அனுப்படுகின்றது. மேல் மாகாணத்தில் மாகாணப் பணிப்பாளருக்கு வழங்கப்படுகின்றது.
- ❖ முறைப்பாட்டின் தன்மைக்கு அமைய வசாரண உத்தியோகத்தரினால் விசாரணை திட்டங்களை வகுத்தல்.
- ❖ விசாரணை செயற்பாடுகள் உரிய மாகாண அலுவலகத்தினால் மேற்கெள்ளப்படுகதுடன் அவர்களுக்கு தேவையான அலோசனை வழிகாட்டல்கள் பிரதான அலுவலகத்தின் பணிப்பாளர் (பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை) அல்லது பிரதிப் பணிப்பாளர் (மாகாண விசாரணை) மூலம் வழங்கப்படுகின்றது.

- ❖ பிராதான அலுவலகத்தில் உள்ள மாகாண இணைப்பு உத்தியோகத்தர் மாகாண அலுவலகம் மற்றும் பிரதான அலுவலகத்திற்கு இடையே அம் மாகாணத்திற்கு உரியதான கோவைகள் பராமரிக்கப்படுகின்றன.

3. விசாரணை செயற்பாடுகளை பூர்த்தி செய்தல்.

- மாகாணப் பணிப்பாளரினால் விசாரணைகளை பூர்த்த செய்ய முடியுமான அனைத்து முறைப்பாடுகளுக்குமி உரிய மாகாண பணிப்பாளரின் பரிந்துரைக்கு அறிக்கையுட் கோவை பிரதான அலுவலத்திற்கு அனுப்பப்படுகின்றது.

- தலைவரினால் அதனை பூர்த்தி செய்ய முடியுமா என்பதனை பரிசீலனை செய்து, தொடாந்தும் அறிக்கை கோவேண்டி இருப்பின் மாகாண இணைப்பு உத்தியோகத்தருக்கு பூர்த்தி செய்ய முடியுமாயின் தலைவரினால் விசாரணை விசாரணைகளைப் பூர்த்தி செய்து முறைப்பாட்டாளருக்கு அறிவித்து ஆணைக்குழுப் பத்திரத்தினை தயாரித்து ஆணைக்குழுவிற்கு சமர்பிப்பதற்காக பணிப்பாளர் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை பிரிவிற்கு ஆலோசனைகள் வழங்கப்படும்.

- 2022.10.27 ஆம் திகதி இடம்பெற்ற 70 ஆவது ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது விசாரணைகளைப் பூர்த்தி செய்வதாக முறைப்பாட்டாளருக்கு அறிவிக்கும் கடிதம் பணிப்பாளர் (பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை) இனால் அனுப்பி பின்னர் அக் கடிதத்தின் பிரதியுடன் விசாரணைகளைப் பூர்த்தி செய்யும் பரிந்துரைகளையும் உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட ஆணைக்குழுப் பத்திரத்தினை ஆணைக்குழுவிற்கு சமர்பிக்க வேண்டும் என்று ஆணைக்குழுவினால் கட்டளை வழங்கப்பட்டது. இதற்கு அமைய அது தொடக்கம் விாரணைகளைப் பூர்த்த செய்யும் முறைகளும் மறுசீரமைக்கப்பட்டது.

- பணிப்பாளரினால் விசாரணைகளைப் பூர்த்தி செய்வதற்கு உரிய பரிந்துரைகளுடன் ஆணைக்குழுப் பத்திரத்தினை சபைக்கு சமர்பிக்கபடும்.

- ஆணைக்குழுவின் தீர்மானத்திற் அமைய விசாரணை செயற்பாடுகளை பூர்த்தி செய்தல் அல்லது சபையின் ஆலோசனைகளுக் அமைய தொடர்ந்தும் விசாரணைகளை் பூர்த்தி செய்தல்.

4. சேவைக்கால பயிற்சி வேலைத்திட்டத்தின் நடாத்துதல்.

புதிய முறைக்கு அமைய விசாரணை செயற்பாடுகளை மேற்கொள்வதும், விசாரணை செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்கதாக உத்தியோகத்தர்களிடம் காணப்படும் அறிவு மற்றும் தொடர்ந்தும் அவிசியப்படும் அறிவு தொடர்பாக சட்ட உத்தியோகத்தரினார் வாராந்தம் பயிற்சி வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதற்கு அமைய அவர்களை அறிவுறுத்த வேண்டிய, பயிற்சியளிக்க வேண்டிய கொள்ளவு விருத்தி செய்ய வேண்டிய பிரிவுகள் அடையாளம் காணப்பட்டன.

5. தகவல் ∴ புள்ளிவிபர அறிக்கையினைத் தயாரித்தல்.

இப் பிரிவின் மூலம் கீழ் குறிப்பிடப்பட்ட தகவல்கள் சமகால மற்றும் தேவைகளுக்கு அமைய தயாரிக்கப்பகின்றது.

- வாராந்த அறிக்கை மூலம் வாராந்த ஆணைக்குழுவினால் புதிய முறைப்பாடுகளுக்கு சமர்பித்தல்.
- உத்தியோகத்தர்களின் நாளாந்த கடமைகளை அறிக்கைப்படுத்தல்.
- ஆணைக்குழுவின் தீர்மானத்தினை அமுல்படுத்தும் முன்னேற்றத்தினை அறிக்கைப்படுத்தல்.
- ஆணைக்குழுப் பத்திரம்.
- மதாந்த, மூன்று மாத, அரையாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கை.
- கிடைக்கும் முமைறப்பாடுகள், முறைப்பாடுகளின் தன்மைக்கு அமைய அறிக்கைப்படுத்தல்.
- பொலிஸ் நிலையத்திற்கு அமைய கிடைக்கப் பெற்றுள்ள அறிக்கை.
- கணக்காய்வு செயற்பாடுகளுக்காக வழங்க வேண்டிய அறிக்கை.
- பாராளுமன்றத்திற்கு வழங்க வேண்டிய அறிக்கை.

6. தகவல் சட்டத்திற்காக தேவையான ஆவணங்களை வழங்குதல்.

எமக்குரியதாகவுள்ள ஆவணங்கள் அல்லது முன்றாம் தரப்பிற்குரிய ஆவணங்கள் தகவல் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய வழங்குதல்.

7. 1960 அவசர அழைப்பு சேவை.

பொது மக்களுக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு சமர்பிப்பதற்கு இலகுவான முறையில் 0710361010 உடன் நான்கு இலக்கங்களைக் கொண்ட 24 மணித்தியாலங்களும் செயற்படும் பொது மக்கள் அழைப்பு இலக்கமாக 1960 அறிமுகப்படுத்தல். பின்னர் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு மத்தியில் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவின் விசாரணை உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான பங்களிப்பிற்கு அமைய இவ் 1960 அவசர அழைப்பு சேவை தொடர்ந்தும் 24 மணித்தியாலங்கள் பூராகவும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தற்போதைய தலைவரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் 1960 அவசர அழைப்பு சேவை அமுல்படுத்தப்பட்டது.

முழு நாளும் எந்த நேரத்திலும் பொது மக்களுக்கு பெயரளவில் அல்லது பெயர் குறிப்பிடாது வாய்மூலம் முறைப்பாடுகளை சமர்பிக்க முடிவதுடன் அம் முறைப்பாடுகள் ஒலிப்பதிவு செய்யப்படும். பின்னர் விசாரணை உத்தியேகாத்தர்களினால் அதற்குரியதாக எதிர்காலர செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் பெயர் குறிப்பிடாது பெற்ற

முறைப்பாடாயின் முறைப்பாட்டாளரின் இரகசியத்தன்மையினை பாதுகாக்கக் கூடியவாறு செயற்பாடுகளை மேற்கொண்டு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7.1 1960 அவசர அழைப்பு சேவை அமுல்படுத்தப்படும் விசாரணை உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்.

- முறைப்பாட்டாளருக்கு செவிமடுத்து கிடைத்த முறைப்பாடுகளை பதிவு செய்தல்.
- சமர்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய துரிதமாக செயற்பட வேண்டிய விடயங்களாயின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அல்லது அரச அறிவித்தல் உத்தியோகத்தருக்கு வாய்மூலம் முறைப்பாடு செய்தல்.
- அவ்வாறு இன்றேல் முறைப்பாட்டினை சுருக்கமாகக் கொண்டு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மின் அஞ்சல் மூலம் ∴ பக்ஸ் மூலம் அல்லது வட்சப் மூலம் எழுத்து மூலம் அறிவித்தல். அவ்வாறு செயற்படுவதற்கு சிசரமான சந்தர்பத்தில் தெலைபேசி மூலம் அறிவித்தல். (வுசு)
- சம்பவத்திற்கு உரியதாக 24 மணித்தியாலங்களுக்குள் நிலையப் பொறுப்பதிகாரியிடம் அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளல்.
- இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை முறைப்பாட்டாளருக்கு அறிவித்தல்.
- முறைப்பாட்டாளர் அவ் விடயங்களுக்க இணங்காது இருப்பின் விரிவாக எழுத்து மூலம் முறைப்பாட்டினை சமர்பிக்குமாறு அறிவித்தல்.
- மேற்கூறப்பட்டவாறு கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக நாளாந்த அறிக்கையினை தயாரித்து பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருக்கு நாளாந்தம் சுருக்கத்தினை சமர்பித்தல்.
- தலைவரிடமிருந்து கிடைத்த அலோசனைகளுக்கு அமைய கிடைக்கும் முறைப்பாடுகளுக்குரியதாக எதிர்கால விசாரனை செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

7.2 1960 அவசர அழைப்பு செயற்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள்.

2022 ஆண்டில் 1960 அவசர அழைப்பு சேவைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையினை வகைப்படுத்தி கீழ் குறிப்பிடப்பட்டவாறு அட்டவணையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

2022.01.01 – 2022.12.31 திகதி வரை 1960 பெற்ற முறைப்பாடுகள்.


அட்டவணை 3

மாதம்	ஆணைக்குழு விடயப்பரப்பிற்கு உரியதாக பெற்றமொத் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	முறைப்பாடுகள் பொலிஸ் நிலையப் பொறுப்புதிகாரி ஆல்யிற்கு ∴ பொலிஸ் அத்தியட்சகருக்கு மற்றும் ஏனைய இடங்களுக்கு சமர்பித்து அவசர நிவாரணங்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை	அவசர நிவாரணத்தை வழங்க முடியாத பிரச்சினைகளுக்காக எதிர்கால செயற்பாடுகளுக்காக ஆலோசனைகள் வழங்கப்பட்ட எண்ணிக்கை	பொது மக்களினால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய கோரிக்கைகள் மூலம் உரிய பிரிவுக்கு அனுப்பட்டஎண்ணிக்கை	அவசர அழைப்பிற்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை
ஜனவரி	595	88	507	350	945
பெப்ரவரி	595	93	502	300	895
மார்ச்	532	84	448	422	954
ஏப்ரல்	418	82	336	326	744
மே	297	138	159	411	708
ஜூன்	370	104	266	376	746
ஜூலை	506	72	434	423	929
ஆகஸ்ட்	330	74	256	396	726
செப்டம்பர்	358	57	301	351	709
ஒக்டோபர்	404	69	335	401	805
நவம்பர்	453	68	385	394	847
டிசம்பர்	307	66	241	459	766
மொத்தம்	**5165**	**995**	**4170**	**4609**	**9774**

அட்டவணை 1 – 2022 ஆண்டிற்குரிய பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் பிரிவின் அவசர அழைப்பு சேவைக்கு கிடைத்த மொத்த கேரிக்கைகளின் எண்ணிக்கை 9774 ஆகும். இதில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விடயப்பரப்பிற்கு உரியதாக 5165 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பொலிசாருக்கு எதிராக பொது மக்களிடம் கிடைத்த மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொது மக்களிடமிருந்து கிடைத்த மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கையில் பொலிஸ் உத்தியயோத்தர்களுக்கு எதிராக பொது மக்களிடமிருந்து 4170 முறைப்பாடுகள் சமர்பிக்கப்பட்டடுள்ளன. இம் முறைப்பாடுகள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு ∴ பொலிஸ்


அத்தியட்சகருக்கு மற்றும் ஏனைய நிலையங்களுக்கு சமர்பித்து அவசர நிவாரணங்கள் வழங்கப்பட்ட எண்ணிக்கை 995 முறைப்பாடுகள் என்பதுடன் இதில் 4170 இற்காக எதிர்கால ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பிர' விசாரணை செயற்பாடுகளைப் பூர்த்தி செய்து அரசியல் யாப்பின் மூலம் விதிக்கப்பட்டுள்ள வாசகத்திற்கு அமைய தேவையான அவசர நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரைபு 1



வரைபு 1 – 1960 அவசர அழைப்பு சேவைக்கு 2022.01.01 – 2022.12.31 திகதி வரை 1960 இற்கு மாதாந்தம் கிடைத்த முறைப்பாடுகள் மற்றும் அதற்குரியதாக கிடைத்த செயற்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரவியல் வரைபு மூலம் காண்பிக்கப்பட்டுள்ளது.

வரைபு 2



7.3 எதிர்கொண்ட சவால்கள்

01. 1960 அவசர அழைப்பு சேவைக்கு உரிய முறைப்பாடுகள் தொடர்பில் தகவல்கள் மற்றும் ஏனைய சேவைகள் இலங்கை பொலிசாரினால் பெற்றுக் கொள்ளும் போது சிரமங்கள் மற்றும் தடைகள் ஏற்பட்ட போதிலும் அச் சவால்களை எதிர்கொண்ட இவ் அழைப்பு சேவையின் கடமைப் பணிகள் பின்னகர்தாது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
02. பகல் நேரங்களில் சேவையாற்றும் போது பொது முகாமைத்து சேவை உத்தியோகத்தர் 1 மூலம் சிறந்த ஒத்துழைப்புக்கள் கிடைத்துள்ளன.
03. 24 மணித்தியாலங்கள் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் சேவைகள் என்பதானால் இரவு நேரத்தில் கிடைக்கும் முறைப்பாடுகள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அல்லது உயர் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அனுப்படுவதுடன் முடியுமான அனைத்து சந்தர்பங்களிலும் பொது மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
04. ஒரு சில முறைப்பாட்டாளர்கள் உண்மையான விடயங்களாக வழங்கும் போலியான தகவல்களை பொலிஸ் நிலையத்திற்கு வழங்கும் போது சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது.
05. 1960 முறைப்பாட்டாளர்களுக்க இலகுவில் பிரவேசிக்க முடியுமான சேவை என்பதனால் ஒரு சில சந்தர்பங்களில் இரவு நேரத்தில் போதையுடன் இருப்பவர்களினால் போலியான வாத்தைகள் மற்றும் தூசித்தமை தொடர்பான முறைப்பாடுகள் கிடைப்பதனால் சிரமத்திற்கு உட்படல்.

06. பொலிஸ் நிலையங்களுக்க முறைப்பாடுகளை சமர்பிக்கும் போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஸீரோ முறைமையினை உற்பத்தித் திறன் மற்றும் வினைத்திறனுடன் அமுல்படுத்தப்படாமையினால் அறிக்கை பெற்றுக் கொள்ளும் தாமதம் ஏற்பட்டது.

7.4 பெற்றுள்ள வெற்றிகள்

01. 2022 ஆண்டிற்குரியதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமையாளர் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ள சிறந்த உதவி சேவைக்கு உரிய ஏழுஐந கழச ஏழுஐநடநளள விருது 1960 இற்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளது.
02. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 1960 அவசர அழைப்பு சேவை 2013 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்பட்ட போதிலும் அதற்குரியதாக முறையான செயற்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதி தொடக்கம் என்பதுடன் ஏற்கனவே அதற்கு உரியதாக பொது மக்களின் வரவேற்பு கிடைத்து வருவதாக குறிப்பிட வேண்டும்.

7.5 யோசனைகள்

பொது மக்கள் முறைப்பாடு மூலம் எதிர்பார்ப்பது அவசல நிவாரணம் என்பதனால் பொலிஸ் ஆணைக்குழுவின் நற்பெயரை மேம்படுத்தக் கூடிய வகையிலான சேவையாக 1960 அவசர அழைப்பு சேவைக்காக பல உத்தியோகத்தர்களை ஈபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

8. பொது நிருவாக செயற்பாடுகள்.

பிரிவின் உத்தியோகத்தர்களின் விடுமுறை, சம்பளப் படி உயர்வு பரிந்துரை, நாளாந்த தபால் போன்ற பொது நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

9. (ை).அவ்வவ் மாகாண அலுவலகங்களுக்கு உரியதாக 2022 ஆம் ஆணடில் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவிற்கு கிடைத்த முறைப்பாடுகள்.


1960 அவசர அழைப்பு சேவைக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கு மேலதிகமாக எழுத்து மூலம் பிரிவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு அமைய முறைப்பாடுகளில் கூடுதலான அளவு மேற்கு ஐ மற்றும் ஐஐ மாகாண அலுவலகங்கள் மற்றும் தென் மாகாண அலுவலகங்களுக்கு கிடைத்துள்ளன. மேல் மாகாண அலுவலகம் ஐ மூலம் மொத்த கொழும்பு மாவட்டத்தையும் தழுவக் கூடிய வகையிலும், மேல் மாகாணத்தில் அலுவலகம் ஐஐ மூலம் மேல் மாகாணத்தில் கம்பஹ மற்றும் களுத்துறை பொலிஸ் அதிகாரப் பிரதேசங்களை தழுவக்கூடியவாறு பொது மக்கள் முறைப்பாடுகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன.

2022 ஆண்டில் பொது மக்கள் முறைப்பாடு விசாரணைப் பிரிவிற்கு கிடைத் முறைப்பாடுகள் மாகாணத்திற்கு அமைய : 2022.01.01 - 2022.12.31

அட்டவணை 4

மாகாணம்	2022 ஆண்டுக்குள் கிடைத்துள்ள முறைப்பர்டுகளின் எண்ணிக்கை
01. மேற்கு 1	346
02. மேற்கு 11	296
03. தெற்கு	259
04. வடமேல்	161
05. மத்தி	146
06. சப்ரகமுவ	128
07. வட மத்தி	113
08. ஊவா	89
09. கிழக்கு	78
10. வடக்கு	60
மொத்தம்	**1676**

வரைபடம் 3



வரைபடம் 3 – மேற்கு 1, 11 மற்றும் தெண் மாகாண அலுவலகங்களில் 2022 ஆண்டில் கிடைத் முறைப்பாடுகளின் விகிதாசாரம் மொத்த முறைப்பாடுகளில் 54% ஆகும்.


(னை). முறைப்பாட்டின் தன்மைக்கு அமைய 2022 ஆண்டில் பொது மக்கள் முறைப்பாட்டு பிரிவிற்கு கிடைத்த முறைப்பாடுகள்.

அட்டவணை 5

முறைப்பாட்டின் தன்மை	2022 அண்டில் முறைப்பாடுகளின் எண்ணிக்கை	விகிதாசாரம் %
01. பொலிசாரினால் செயற்பாடுகள் மேற்கொள்ப்படாமை	516	31
02. தாக்குதல்	403	24
03. சித்திரவதை மேற்கொள்ளல்	339	20
04. அதிகாரத்தினை முறையற்றரீதியில் பயன்படுத்தல்	217	13
05. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வண்முறைகள்.	31	2
06. சட்ட விரோதமான தடுத்துவைத்தல்	20	1
07. இலஞ்ச ஊழல்	64	4
08. பக்கசார்புடன் செயற்படல்	5	0
09. பொய்க் குற்றச்சாட்டு	3	0
10. பெரிசாரினால் கைது செயய்ப்பட்டு இருக்கும் வேளையில் உயிரிழத்தல்.	27	2
11. போதைப் பொருள் குற்றம்	1	0
12. ஏனையவை	50	3
மொத்தம்	**1676**	**100**

அட்டவணை 3 – இதற்கு அமைய பொலிசாரினால் செயற்படாமை, தாக்குதல், சித்திரவதை செய்தல், மற்றும் அதிகாரத்தை முறையற்ற ரீதியில் பிரயோகித்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் கூடுதலான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அது மொத்த முறைப்பாடுகளில் 75% ஆகும்.

வரைபடம் 4




(னை). 2022 ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் 2022.12.31 ஆம் திகதியளவில் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை செயற்பாடுகளின் முன்னேற்றம்

அட்டவணை 6

மாகாணம்	2022 ஆண்டில் பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை	2022.12.31 ஆம் திகதியளவில் மாகாண அலுவலகத்தினால் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட மாகண இணைப்பு உத்தியோகத்தர்களுக்கு அனுப்பட்டுள்ள எண்ணிக்கை	2022.12.31 ஆம் திகதியளவில் ஆணைக்குழுவினால் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை	2022.12.31 ஆம் திதகியன்று விசாரணைகளை பூர்த்தி செய்வதற்கா ஆணைக்குழுவிற்கு சமர்பிக்க வேண்டிய கேவைகளின் எண்ணிக்கை	விசாரணைகள் பூர்த்தி செய்வதற்கு மாகாண அலுவலகங்களில் எஞ்சியுள்ள எண்ணிக்கை
மேற்கு 1	346	95	95	-	**251**
மேற்கு 11	296	92	92	-	**204**
மத்தி	146	32	23	9	**114**
தெற்கு	259	101	76	25	**158**
வடக்கு	60	25	4	21	**35**
கிழக்கு	78	62	22	40	**16**
வடமேல்	161	87	44	43	**74**
வட மத்தி	113	90	27	63	**23**
ஊவா	89	50	25	25	**39**
சப்ரகமுவ	128	54	44	10	**74**
மொத்தம்	**1676**	**688**	452	236	**988**

வரைபடம் 5



2.2.3. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மாகாண அலுவலகங்கள்

தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதாவது 2005 – 2007 காலப் பகுதியில் பொது மக்கள் முறைப்பாடுகளை பொறுப்பேற்பதற்காக மாகாண அலுவலகங்கள் தாபிக்கப்பட்டன. மாகாண அலுவலகங்கள் தாபிக்கப்பட்டமைடயினால் பிரதேச ரீதயில் இச் செயற்பாடுகள் தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்துவதற்கும் பாரிய உதபியாக அமைந்துள்ளதுடன் பொலிஸாருக்கு எதிராக காணப்படும் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை செயற்பாடுகள் ஓர் அளவு பன்முகப்படுத்தும் முறைகள் எட்டப்பட்டுள்ளன.

அனைத்து மாகாணங்களும் ஒரு அலுவலகம் என்ற வகையி 09 மாகாணங்களில் 09 மாகாண அலுவலகங்கள் தாபிக்கப்பட்டடுள்ளதுடன் மாகாணப் பணிப்பாளரின் தலைமையில் மற்றும் விசாரணை உத்தியோகத்தர்களின் உதவியுடன் பணியாளர் சபை அங்கத்தவர் ஒருவர் இதற்கு இணைப்பு செய்யப்பட்டுள்ளார். இதற்கு அமைய மாகாணத்தில் பொலிசாரின் செயற்பாடுகள் அல்லது சேவைப் புறக்கணிப்புக்களை மாகாண ஆலுவலகங்களுக்கு அனுப்ப முடியும்.

விஷேடமாக பொலிசாரினால் வழங்கப்படும் பொது மக்கள் சேவைகளின் போது மற்றும் சட்டத்தினை அமுல்படுத்தும் போது ஏற்படும் குறைபாடுகள், சட்டம் மற்றும் அமைதியினை பேனும் போது குற்றவியல் விசாரணையின் போது, சட்ட விரோத போதைப் பொருள் ஒழிப்பின் போது, பொலிஸ் சேவையின் பண்புசார் தரம் தொடர்பாக மாகாணம் தோறும் சென்று மாகாணத்திற்கு சென்று பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாடுகள் நாடெங்கும் 09 மாகாணங்களில் அமுல்படுத்துவதற்கு மாகாண அலுவலகங்கள் ஊடாக அவற்றின் இணைப்புக்களுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது. விஷேடமாக பொது மக்கள் முறைப்பாடுகள் பாரியளவில் கிடைக்கும் துறைகள் தொடர்பாக எதிர்கால கொள்கைகளை வகுத்தல் மற்றும் பொலிசாருக்கு எதிராக பொது மக்கள் முறைப்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கு அத்தியவசிய காரணியாக மாற்றம் பெற்றுள்ளது. அத்துடன் நீண்டகாலம் பொது மக்களுக்கு உயர் பண்புசார் தர கொண்ட சேவையினை வகுப்பதற்கு தேவையான செயற்பாடுகளை கண்டறிந்து அதற்காக பொலிசாரின் செயற்படுத்துவதற்கு அவசியம் என்பதுடன் பொலிசாருக்கு எதிராக பொது மக்கள் முறைப்பாடுகள் இதன் குறைவடையும்.

மாகாண பணிப்பாளர் பிரதேச செயலாளருடன் இணைப்பினை மேற்கொண்டு கிராமிய மட்டத்திலர் சமூக அமைப்புக்கள், தொண்டர் அமைப்புக்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் ஏனை சமூக அமைப்புக்களை அறிவுறுத்தி பிரச்சார வேலைத்திட்டங்களும் பொலிஸ் ஆணைக்குழுவின் மாகாண அலுவலகம் ஊடாக அமுல்படுத்தப்பட்டடுள்ளது. இதன் பொறுப்புக்கள் மாகாண பணிப்பாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்க்கு நாட்டின் பல பாகங்களிலும் உள்ள மக்களுக்கு தகவலை வழங்கவதற்கானஹ்ரீ பொறுப்பு மாகாண ஆலுவலகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் ஆணைக்ழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் பொது மக்களைப் போன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் ஆணைக்குழுவின் புதிய முறைகள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்துவதற்கு துண்டுப் பரசுரங்களை அச்சிட்டு

விநியோகிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதுடன் இச் செயற்பாடுகளின் இணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவது மாகாண ஆலவலகங்களில் உள்ள ஆணைக்குழுவின் பிரதிகள் மூலமாகும்.

